### சென்னை - கிண்டியில் அமைந்துள்ள

# கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் திடீர் ஆய்வு !

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்!

**சென்னை, ஜுலை 25-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.7.2024) சென்னை, கிண்டியில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளிடம் அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் மற்றும் மருத்துவமனையின் சிகிச்சை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.**

சென்னை, கிண்டி, கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.240.54 கோடி செலவில் உலகத் தரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.6.2023 அன்று திறந்து வைத்தார். 1000 படுக்கை வசதிகள்கொண்ட கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில், இருதயவியல் துறை, இருதய அறுவை சிகிச்சைத் துறை, நரம்பியல் துறை, நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறை, புற்றுநோய் மருத்துவத் துறை, புற்றுநோய் அறுவை சிகிச்சைத் துறை, குடல் இரைப்பை மருத்துவத் துறை, குடல் இரைப்பை அறுவை சிகிச்சைத் துறை, சிறுநீரக அறுவை சிகிச்சைத் துறை, சிறுநீரக மருத்துவத் துறை, இரத்த நாள அறுவை சிகிச்சைத் துறை, மூளை இரத்தநாள கதிரியல் துறை ஆகிய உயர் சிறப்பு மருத்துவச் சிகிச்சைக்கான வசதிகளை கொண்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த மருத்துவமனையில் செயல்பட்டு வரும் அவசர பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் உடல்நிலை குறித்து விசாரித்ததோடு, அந்த நோயாளிகளின் உறவினர்களுடன் உரையாடினார். மேலும், நரம்பியல் சிகிச்சை பிரிவிற்கும் சென்று அங்கு உள்ள நோயாளிகளை சந்தித்து, அவர்களுக்கு வழங்கப்படும் இயன்முறை சிகிச்சைகளையும் பார்வையிட்டார். இதனையடுத்து, இங்கு செயல்பட்டு வரும் இதய கேத்லாப் ஆய்வகத்திற்கு சென்று ஆய்வு செய்து, நோயாளிகளிடம் சிகிச்சை விவரங்கள் குறித்தும் மருத்துவ வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.7.2024) சென்னை, கிண்டியில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டபோது, நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை ஆய்வு செய்தார். உடன் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை முதல்வர் டாக்டர் பார்த்தசாரதி, சிறப்பு அலுவலர் டாக்டர் ரமேஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

அதனைத் தொடர்ந்து, நோயாளிகளுக்கு உணவு வழங்கப்படும் உணவுக் கூடத்திற்கு முதலமைச்சர் அவர்கள் சென்று, அங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை சுவைத்துப் பார்த்து ஆய்வு செய்தார்.

பின்னர், பணியாளர்களின் வருகைப் பதிவேடு, மருந்துகள் இருப்பு பதிவேடு போன்றவற்றை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, அதன் விவரங்கள் குறித்து கேட்டறிந்தார். அதிக எண்ணிக்கையில் நோயாளிகள் வந்து செல்லும் இந்த மருத்துவமனைக்கு, கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பராமரிப்பு பணியாளர்களை நியமிக்குமாறும், டயாலிசிஸ் சிகிச்சை பிரிவிற்கு கூடுதல் டயாலிசிஸ் இயந்திரங்களை வழங்குமாறும் ஆணையிட்டார்.

இந்த ஆய்வின்போது, முதலமைச்சர் அவர்கள், மருத்துவமனை முதல்வர் மற்றும் மருத்துவர்களிடம் மருத்துவமனையை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்றும், நோயாளிகளுக்கு தேவையான சிகிச்சைகளை காலதாமதமின்றி வழங்கிட வேண்டும் என்றும், அத்தியாவசிய மருந்துகள் தேவையான அளவிற்கு இருப்பு வைத்திருப்பதை உறுதி செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை முதல்வர் டாக்டர் பார்த்தசாரதி, சிறப்பு அலுவலர் டாக்டர் ரமேஷ், மருத்துவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

### திராவிட நாயகர் முதல்வரின் இமாலய சாதனை

# மக்கள் தேடிப்போன அரசு எந்திரங்கள், இன்று மக்களைத் தேடிப்போகிறது!

## கொரடாச்சேரியில் பூண்டி.கலைவாணன் எம்.எல்.ஏ.பேச்சு!

*திருவாரூர், ஜுலை 25-*

இந்திய துணைப் பெருங்கண்டமே பாராட்டும் அளவில், அரசு எந்திரங்களை தங்கள் தேவைக்காக தேடிப்போன பொது மக்கள், இன்று மக்களை தேடி அரசு எந்திரம் வரும் நிலையை உருவாக்கி, உலக அளவில் உயர்ந்து நிற்பது தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் தளபதி அவர்களின் இமாலய சாதனை என்று சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே. கலைவாணன் கொரடச்சேரியில் நடைபெற்ற மக்களைத் தேடி முதல்வர் திட்ட விழாவில் பேசினார்.



திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம் பெருமாளகரம் தனியார் திருமண மண்டபத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறும் நிகழ்வை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், கொரடாச்சேரி ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ஆர்.பாலச்சந்திரன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

விழாவில் பேசிய சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் , இந்திய துணைக்கண்டமே பாராட்டும் அளவில் தமிழ்நாட்டின் வளர்ச்சியை மட்டுமே குறிக்கோளாக கொண்டு செயல்படும் தமிழ்நாடு முதலவர் திராவிட நாயகர் தளபதி அவர்கள், தேர்தல் நேரத்தில் பொதுமக்களுக்கு கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறார்.

அதன்படி தி.மு.க. தலைமையிலான அரசு ஆட்சிப்பொறுப்புக்கு வந்தால் , பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக அரசு அலுவலகங்களில் தேடிப் போய் காத்திருக்கும் நிலையை மாற்றி , பொது மக்களின் கோரிக்கைகளை கேட்டு செய்து தருவதற்கு மக்களை தேடி அரசு அதிகாரிகள் வருவார்கள் என்கிற வாக்குறுதியை தந்திருந்தார். அதன்படி இன்று பொதுமக்களாகிய உங்களைத்தேடி இன்று அரசு அதிகாரிகள் வந்திருக்கிறார்கள்.

உங்கள் குறைகளை கேட்டு விரைவாக செய்து தருவதற்காக இந்த மக்களைத்தேடி முதல்வர் எனும் மக்கள் நேர்காணல் முகாம் தமிழ்நாடெங்கும் மக்களின் ஏகோபித்த பாராட்டுக்களுடன் நடைபெற்றுவருகிறது. உலக அரங்கையே திரும்பிப் பார்க்க வைத்த இந்த திட்டம், இமாலய சாதனைகள் புரிந்து, உலக தலைவராக நம் முதல்வர் திராவிட நாயகர் தளபதி அவர்களின் புகழை உயர்த்தி இருக்கிறது என குறிப்பிட்டு பேசினார்.

கொரடாச்சேரி பெருமாளகரம் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில், கொரடாச்சேரி ஒன்றியத்திற் குட்பட்ட திருவிட வாசல், களத்தூர், பெருமாளகரம், விஸ்வநாதபுரம், அத்திக்கடை, முசிரியம், விடயபுரம், மேலராதாநல்லூர் ஆகிய கிராம ஊராட்சிகளுக்குட்பட்ட பொது மக்கள் பயன்பெற்றனர். முகாமில் 2024-25ஆம் நிதியாண்டிற்கு கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் ரூ.3 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் பயனாளிகளே கட்டிக்கொள்வதற்காக 30 நபர்களுக்கு நிர்வாக அனுமதிக்கான ஆணையினையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறையின் சார்பில் 5 தாய்மார்களுக்கு கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகத்தினையும் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன், மாவட்ட ஆட்சித் தலைவர் சாருஸ்ரீ ஆகியோர் வழங்கினார்கள்.

இம்முகாமில் திருவிடவாசல், களத்தூர், பெருமாளகரம், விஸ்வநாதபுரம், அத்திக்கடை, முசிரியம், விடயபுரம், மேலராதாநல்லூர் ஆகிய ஊராட்சி மன்றத்தலைவர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், உள்ளிட்ட அனைத்துறை அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் , பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நாமக்கல், சேந்தமங்கலம், ராசிபுரம் ஆகிய தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களில் உள்ள கழக நிர்வாகிகளின் குழந்தைகளுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம் பேராசிரியர் அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு 29 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 22 லட்ச ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட திமுக அவை தலைவர் சி.மணிமாறன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே.பொன்னுசாமி மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

### மாதவரம்

# எம்.விக்னேஸ்வரன் மறைவு!

சென்னை, ஜுலை 25–

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, 17வது வட்டம் தீயம்பாக்கம் பகுதியில் வசிப்பவர் எம். விக்னேஸ்வரன் என்கின்ற விகின் ஆவார். கழகத்தின் மூத்த முன்னாடியும் ஆவார்.

இவர் உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். மருத்துவ சிகிச்சை பலனளிக்கா மல் எம். விக்னேஸ்வரன் கடந்த 22–7–2024 பிற்பகல் இயற்கை எய்தினார். அன்னாரின் உடல் வைக்கப்பட்டிருந்த தீயம்பாக்கம் கிராமத்திற்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் சென்று விக்னேஸ்வரன் அவர்களின் திருவுடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். மேலும் அவரது பெற்றோர்கள் உற்றார் உறவினர்கள் குடும்பத்தினர் கழகத்தினருக்கு தனது ஆறுதலையும் தெரிவித்துக் கொண்டார்.

17வது வட்டச் செயலாளர் கே .கருணாகரன் வட்டக் கழக நிர்வாகிகள் எஸ். பாலாஜி, கே. சண்முக பிரியன், பூபாலன், சுதர்சன் ஜான்சன், வில்சன், உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

---

# சாதியை எதற்குப் பயன்படுத்த வேண்டும் ?

## ‘சமூக நீதி’க்கான பாதையாக - பல நூற்றாண்டுகளையும் கடந்து நிற்கும் தலைவர் கலைஞரின் கருத்து!

**சென்னை, ஜுலை 24-**

**“சாதியை எதற்கு பயன்படுத்த வேண்டும்? எதற்காக துணைக்கு அழைக்கக்கூடாது?” என்பதை குறிப்பிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு சமூக நீதி அரசியலின் பாதையாக அமையும் என்றால் அது மிகையல்ல.**

**இதுகுறித்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் உரை வீடியோவாக சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அவ்வுரையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

இன்றைக்கு சாதி தேவைதான். எதற்கு? நாங்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள். நாங்கள் உயர முடியவில்லை. உயர முடியாமல் அழுத்தப்பட்டோம், ஒடுக்கப்பட்டோம்.



கல்வியில், வேலைவாய்ப்பில் எங்களுக்கு உரிய இடம் கிடைக்க வில்லை. அப்படி கிடைக்காததற்குக் காரணம், உயர் சாதிக்காரர்கள், முன்னேறிய சாதிக்காரர்கள் முந்திக் கொண்டு, எங்களை மேலும் மேலும் அழுத்திக் கொண்டுவிட்டார்கள்.

**ஆகவே, எங்களுக்கு சில உரிமைகள் வேண்டும். எனவே இந்தச் சாதியை சொல்லிக் கொள்கிறோம் என்று ஒரு அடையாளத்திற்காகத்தான் சாதி சொல்லப்படவேண்டுமேயல்லாமல், நாங்கள் தனித்துத் தான் வாழ்வோம், தனியாகத்தான் இருப்போம் என்பதற்காக அல்ல சாதிகள்.**

தென்னை மட்டையை பார்க்கிறோம். அந்த தென்னை மட்டையிலே ஓலைகளைப் பார்க்கிறோம், தனித் தனியாகத் தான் இருக்கின்றன. ஆனால் ஒரே மட்டையிலே இருக்கின்றன. தனித் தனி ஓலைகளாக இருக்கிற காரணத்தால் அவைகள் தனித் தனி சாதி ஓலைகள் இல்லை. எல்லாம் ஒரே வகையான ஓலைகள்தான். அதை காட்டத்தான் நம்முடைய பெரியவர்கள், கிராமத்திலே உள்ளவர்கள் அந்த ஓலைகளை எல்லாம் பின்னிப் பின்னி கீற்றுகளாக ஆக்குகிறார்கள். அந்தக் கீற்றுதான் நிழல் தரும் பந்தலுக்கு பயன்படுகிறது.

அதைப்போலத்தான் அந்த ஓலைகளை எல்லாம் பின்னுகின்ற வேலையிலே ஈடுபட்டிருப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

**எனவே மதச்சார்பற்ற ஒரு நாடு தேவை என்பதைபோல் சாதி சார்பற்ற ஒரு நாடும் தேவை என்பதை நாம் மறந்துவிடாமல், “சாதியிலே, மதங்களிலே சாயாதே” என்று சொன்னாரே வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள், அந்தக் கருத்தை மனதிலே பதிய வைத்து பாடுபட வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் அரசியலுக்காக மாத்திரம் நடைபெறுகிற இயக்கம் அல்ல, சமுதாய முன்னேற்றத்திற்காகவும் நடைபெறுகின்ற இயக்கம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அவ்வுரையில் குறிப்பிட்டுள்ளார்.